# ★ தமிழகம் மற்றொரு ஈழமாக மாறும் — ராமதாஸ் எச்சரிக்கை

(சென்னை)

''இலங்கை அரசின் கொள்கைகளை இந்திய அரசும் கடைப்பிடித்து தமிழ்மக்களின் உரிமைகளை மறுத்தால் ''தமிழகம் மற்றொரு ஈழமாக'' மாறிவிடும்.

இவ்வாறு நேற்று சென்னையில் நடைபெற்ற பாட்டாளி

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 26 இதழ் 213
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 11 — 09 — 1992

## பயங்கரவாத செயலில் புலிகள் ஈடுபடவில்லை

(சென்னை)

விடுதலைப்புலிகள் இயக்கம் இந்திய மண்ணில் பயங்கரவாத செயல் எதிலும் ஈடுபட்டதாக சான்று எதுவும் இல்லையென பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் கூறினார்.

[4ம் பக்கம் பார்க்க)

## குடியேற்றத்தை தடுக்கவே படையினர் மீது தாக்குதல்

(பாரிஸ்)

முல்லைத்தீவு, திருகோணமலையில் சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்தும் நோக்கிலேயே மணலாற்றிலும், திருமலையிலும் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தி

[4 ம் பக்கம் பார்க்க]

# மூதூர் கடலில் படகு சிதறடிப்பு

# 24 ராணுவம் உட்பட 30 பேர் பலி

(கொழும்பு)

**திருமலை மூதூர் கடலில் நேற்றுக் காலை படகொன்று குண்டுவைத்து தகர்க்கப்பட்டதில் அதில் பயணம்செய்த 24 இராணுவத்தினர் உட்பட முப்பதுபேர் உடல்சிதறிப் பலியானார்கள்**

நேற்று காலை நடைபெற்ற இத்தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்திய தாகபாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திருமலை மாவட்டத்திலுள்ள கிளிவெட்டியிலிருந்து மூதூருக்கு சென்றுகொண்டிருந்த படகில் மறைத்துவைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததிலேயே படகு தகர்க்கப்பட்டு அதில் பயணம் செய்த 24 இராணுவத்தினரும், 6 சிங்களவர்களும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் சிங்களவர்கள் தரப்பில் நான்கு பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்த படையினரின் சடலங்கள் சிதறிய நிலையில் கடலில் மிதந்துகொண்டிருந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

(ரி சு-சி)

## இராணுவ தளபதி திருமலை விரைவு

(கொழும்பு)

திருமலை கடலில் நேற்று படகொன்றில் குண்டு வெடித்த சம்பவத்தையடுத்து திருமலைக்கு இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்தின விரைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் 24 படையினர் கொல்லப்பட்டமை படையினர் தரப்பில்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் பற்றி நேரில் அறியும் பொருட்டே இராணுவ தளபதி திருமலைக்கு விரைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## படை நடவடிக்கை வடக்கில் பாதிப்பு?

(கொழும்பு)

வடபகுதியில் இராணுவ நடவடிக்கையில் பாதிப்பு ஏற்படலாமென கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

கிழக்கில் பெருமளவில் படையினர் குவிக்கப்பட்டு படைநடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. திருமலை, மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதியில் வீதித் தடைகள்

[4ம் பக்கம் பார்க்க]

## 19 படையினரின் சடலங்கள் மீட்பு

(திருமலை)

மூதூர் கடலில் நேற்று படகொன்று தகர்க்கப்பட்டதில் கொல்லப்பட்ட 24 படையினரில் 19 படையினரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் மூன்று பொதுமக்களின் சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் நேற்றிரவு தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

(வட்டுக்கோட்டை)

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அராலித்துறையில் இருந்து அராலி, வட்டுக்கோட்டை பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## முப்படையினரின் தொகை 2 லட்சமாக அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

படையினரின் தொகை அடுத்த இருவருடத்தில் இரண்டுலட்சமாக அதிகரிக்கப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

படையினரின் எண்ணிக்கை அதிகரிக்குமாறு அரசுக்கு நெருக்குதல் கொடுக்கப்பட்டு வருவதையடுத்தே படையினரின் தொகையை அதிகரிக்க அரசு முன்வந்துள்ளது.

இதற்காக இப்போதிருந்தே

[4ம் பக்கம் பார்க்க]

## தாக்குதலை தொடருமாறு தமிழ்க்குழு வற்புறுத்து

[கொழும்பு]

யாழ். குடா மீது மீண்டும் இராணுவ தாக்குதலை மேற்கொள்ளவேண்டுமென அரசுக்கு ஆதரவாக இயங்கி வரும் கொழும்பிலுள்ள தமிழ்குழுக்கள் வலியுறுத்தி வருகின்றன.

வடபகுதியில் கடமையாற்றும் படைத்தளபதிகளையும் அவர்கள் தூண்டிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாபகுதியில் இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## ஏலத்தில் அடகு நகைகள்

(கொழும்பு)

மக்கள் வங்கியில் அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள்கொழும்பில்வைத்து ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

கொழும்பு முதலிசே மாவத்தையிலுள்ள மக்கள் வங்கிகிளையில் எதிர்வரும் 23ம் திகதி முதல் இந்த பெறுமதியான நகைகள் விற்கப்படவுள்ளன. (கே)

## ★ கொழும்பில்

## அமெரிக்க தூதரகம் முன்னால் துப்பாக்கி இளைஞர் கைது

[கொழும்பு]

கொழும்பில் அமெரிக்க தூதரகம் முன்னால் துப்பாக்கியுடன் நடமாடிய இளைஞர் ஒருவர் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்க தூதரகம் முன் இந்த நபர் ரைபிளுடனும், தோட்டாக்களுடனும் நடமாடிய போது இவர் பாதுகாப்பு அதிகாரிகளினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

(4ம் பக்கம் பார்க்க)

இரதோற்சவ சிறப்பு மலர்

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோவிலில் இன்று நடைபெறும் இரதோற்சவத்தை முன்னிட்டு உள்ளே இன்று சிறப்பு மலர் வெளியிடப்படுகின்றது.

—நிர்வாகி.

## பல கோடி ரூபாவுக்கு அரசு இராணுவ தளபாடம் கொள்வனவு

(கொழும்பு)

சிறிலங்கா ராணுவத்திற்கு 1993 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் ராணுவ தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முகவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

ஆயுதமும் அதற்குரிய உதிரிப்பாகங்கள், வெடிப்பொருட்கள், தொலைத் தொடர்புச் சாதனங்கள் அதற்குரிய உதிரிப்பாகங்கள், ஊரகவாகனங்கள் படையினருக்கான உடுபுடவைகள், பட்டிகள், மோட்டார்கள், மற்றும் பாரிய பொருட்களை கொண்டுசெல்லும்வாகனம், ஒளி, ஒலிபரப்பு சாதனங்கள், மின்சார உபகர

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ காவல்துறை 2-வது அணியயிற்சி நிறைவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ காவல்துறையின் 2-வது பிரிவினர் தமது பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய வைபவம் நேற்று யாழ். நகரில் நடைபெற்றது.

மேற்படி பயிற்சிப் பிரிவினரின் அணிவகுப்பு மரியாதையை தமிழீழக் காவல்துறைப்பொறுப்பாளர் திரு. பா. நடேசன் ஏற்றுக்கொண்

(4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி–6690)

### விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட பீற்றூட் விதைகள் விற்பனைக்குண்டு (100 g ரின்) சனி ஞாயிறு தினங்களில் வீட்டிலும் பெற்றுக்கொள்ளலாம். 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். தொடர்பு: பிள்ளையார் 251 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-67[illegible]2)

### வகுப்புகள்

(ஆண்டு 4 முதல் ஆண்டு 9 வரை)

ஆண்டு 4 முதல் ஆண்டு 9 வரை சகல பாடங்களும் யாழ் முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன. மாதாந்த, இடைத்தவணை தவணைப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு மாணவரின் முன்னேற்றம் பெற்றோருக்கு அறியத்தரப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6795)

### பாரதியார் பாடல் திரட்டு

இன்று 11 – 09 – 1992, சுப்பிரமணிய பாரதியார் நினைவு நாள். பாரதியார் படத்துடன்கூடிய பாரதியார் கவிதைத்திரட்டு நூல், அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ள, 'மில்க்வைற் நீல சோப் மேலுறை 25 சேர்ப்பிக்கவும். மில்க்வைற் நீல சோப் கட்டி ஒன்று ரூபா 7/- மில்க்வைற், யாழ்ப்பாணம். ஏ-2429

### புலமைப் பரிசில் பரீட்சை

(ஆண்டு – 4)

தற்போது ஆண்டு 4ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை (ஆண்டு – 4 பாடத்திட்டத்திற்குள்) 13-09-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11 மணி நேரங்களில் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) நடைபெறும். பதிவுசெய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6794)


## 3,000 அகதிகளை அனுப்ப ஏற்பாடு

(சென்னை)

இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் துரிதம் காண்பிக்கப்படுமென இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் 3 ஆயிரம் பேர் வரை விமான, கப்பல் மார்க்கமாக அனுப்பப்படுவர் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (கே)

## பரிதாபமரணம்

(நெல்லியடி)

கிணற்றுக்குள் விழுந்த கோழியை மீட்பதற்காகக் கிணற்றுக்குள் இறங்கிய இளைஞரொருவர் கோழியை மீட்டெடுத்தபின் கிணற்றிலிருந்து வெளியே வந்த சமயம் கிணற்றுக் கட்டில் உள்ள கல்லைக் கைப்பிடியாகப் பிடித்தவேளை அக்கல்லுடன் சேர்ந்து மீண்டும் கிணற்றுச்குள் வீழ்ந்தார். இதனால் தலையில் ஏற்பட்ட பாரிய காயத்தினால் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இவ்வாறு மரணமானவர் பொலிகண்டி குருநாத கோவிலடி விசாகப்பெருமான் கணேசு (வயது-36) என்னும் வாலிபராவார். (160)

## விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

அரசகரும மொழிச் சட்டத்தின் பிரகாரம் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகள் எந்தளவுக்கு அதிகாரிகளினால் பின்பற்றப்படுகிறது என்பதனை கண்டறியும் அரசகரும மொழி ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சமய, கல்வி நிறுவனங்களுடனும் மற்றும் கொழும்பு மாநகரசபையுடனும் இணைந்து ஆணைக்குழு தனது வேலையை ஆரம்பித்துள்ளது. (கே)


### சன்மார்க்கசபை - குரும்பசிட்டி

## பாரதி விழா

இடம்:- யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்
காலம்:- 12-09 92 சனி பிற்பகல் 3 மணி.

நிகழ்ச்சிகள்

(அ) ஆய்வரங்கு

பாரதியின் பாஞ்சாலி சபதம்
தலைவர்:- திரு ஆர். எஸ் நடராஜா எம். ஏ.
பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் நாடகக் கட்டமைப்பு
திரு. கே. கே. சோமசுந்தரன் பீ. ஏ.
பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் கவிதைக் கட்டமைப்பு
கவிஞர் சோ. பத்மநாதன் பீ. ஏ.

(ஆ) நாடக அரங்கு

"மயில்" - சிறுவர் நாடகம்
நெறியாள்கை:- கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. விஸ்வநாதன்
பிரசார செயலாளர்

(சி-6793)

### க. பொ. த. (சாதாரணம்) முன்னோடித் தேர்வு 1992

## புள்ளி வழங்கும் தேர்வாளர்

மேற்படித் தேர்வு விடைத்தாள்களை மதிப்பிட்டுப் புள்ளி வழங்கும் தேர்வாளர்களைத் தெரிவு செய்வதற்குத் தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன. புள்ளி வழங்கும் தேர்வாளருக்குப் பின்வரும் தகைமைகள் அமைந்திருக்கவேண்டும்.

01. ஒருவர் எப்பாடத்துக்குப் புள்ளி வழங்க விண்ணப்பிக்கிறாரோ அப்பாடத்தை அவர் கடந்த மூன்று வருடங்களாக க பொ த. (சாதாரணம்) வகுப்பு நிலையிற் கற்பித்திருக்க வேண்டும்.
02. க. பொ. த. (சாதாரணம்) தேர்வில் முன்னர் புள்ளி வழங்கிய அனுபவம் இருத்தல் இன்றியமையாதது.
03. பட்டதாரிகளாயின் 5 ஆண்டுகள், பயிற்றப்பட்டவர்களாயின் 10 ஆண்டுகள், பயிற்றப்படாதவராயின் 15 ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் உள்ளவராயிருத்தல் வேண்டும். தமிழ்ப்பாட விடைத் தாள்களை மதிப்பிடுவதற்குப் பண்டிதர்கள் / வித்துவான்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப் படிவத்தினைப் பின்பற்றிப் படிவம் ஒன்றினைத் தயாரித்து, உரிய தகவல்களைத் தந்து, அப்படிவத்தை உங்கள் பாடசாலை அதிபரூடாகப் பின்வரும் முகவரிக்கு 20-09-1992 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

தெரிவு செய்யப்படும் தேர்வாளர்கள் குழு நிலையில் விடைத்தாள்களை மதிப்பீடு செய்து புள்ளி வழங்கத் தயாராயிருத்தல் வேண்டும்.

புள்ளி வழங்குவதற்கான கட்டணம் பற்றிய விபரம் புள்ளி வழங்குவோர் கூட்டத்தில் அறிவிக்கப்படும்.

பணிப்பாளர்,
மதிப்பீட்டுக்கிளை,
இல. 19, செம்மணி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. பெயர்: திரு / திருமதி / செல்வி:-
2. பாடசாலையின் பெயர்:-
3. புள்ளி வழங்க விண்ணப்பிக்கும் பாடம்:-
4. கல்வித் தகைமை:-
5. க. பொ. த (சா) வகுப்பில் மேற்படி பாடம் விண்ணப்பதாரரால் கற்பிக்கப்படுகிறதென அதிபர் வழங்கும் கூற்று:-
6. முன்னர் புள்ளி வழங்கிய அனுபவம்:-
7. விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் காலத்திலோ, தேர்வு மறுமொழி வருவதற்கு முன்னரோ தேர்வு தொடர்பான காப்புத்தன்மையைப் பேணுவேன் என உறுதி வழங்குகிறேன்.

.......................................
கையொப்பம்.

(எ-2428)


## மலர் வெளியீட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும் மலர் வெளியீட்டு விழாவும், கலை வெளிப்பாட்டு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு, யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில், கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு தேவர் தலைமையில் நடைபெறும்.

தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்ச்சியில் பண்டிதர் வீ. பரந்தாமன் தலைமையில் நடைபெறும் 'எழுதாத கை உலக்கை' எனும் கருத்தரங்கில் செம்பியன்செல்வன், கலாநிதி சபா ஜெயராசா, சி சிவலிங்கராசா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர்.

இவ்வைபவத்தில் திரு. வெ. இளங்குமரன் வெளியீட்டுரையையும், திரு. வி. பி. சிவநாதன், திரு சொக்கன் ஆகியோர் ஆய்வுரைகளையும் திரு. சிதம்பரதிருச்செந்திநாதன் பதிலுரையையும் நிகழ்த்துவர்.

"தாயை நிகரெங்கள் தாயகத்தைத் காதல் செய்" என்ற தலைப்பிலான கவியரங்கு திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் இடம்பெறுகின்றது. இக்கவியரங்கில் திரு. யோகரத்தினம் யோகி, மு. வே. யோ. வாஞ்சிநாதன், திருமாறன், இளந்திரையன், செல்விகள் ஜெயா தமிழவள், உதயலச்சுமி ஈழப்பிரியா, வசந்தா ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெறும் கலை அரங்கில், விடுதலைப் புலிகள் படையணிப் போராளிகள் வழங்கும் 'சிதனை அம்புகள்' நாட்டிய நாடகமும், யாழ் நாடக அரங்கக் கல்லூரி வழங்கும் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்' நாடகமும் இடம்பெறும்.

## அறுவடை செய்ய முடியாது விவசாயிகள் கவலை

(பண்டத்தரிப்பு)

மாதகல் பகுதியிலும் காடப்புலம் பகுதியிலும் இராணுவ நடமாட்டம் அதிகரித்துள்ளதாலும் துப்பாக்கிச் சூடுகள், ஷெல்கள் என்பன பண்டத்தரிப்பு பகுதியில் அடிக்கடி விழுந்து வெடிப்பதாலும் இப்பகுதியிலுள்ள வயல்காணிகளில் தாங்கள் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த குரக்கன், பீற்றூட், வெங்காயம் ஆகியவற்றை அறுவடை செய்ய முடியாது விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

யு. எஸ். கெயர் விவசாய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் இப்பகுதி விவசாயிகள் உதவிகளைப்பெற்று குரக்கன் செய்கையில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது குரக்கன் பயிர் நன்கு விளைச்சலைக் கொடுத்துள்ள போதிலும் இதனை அறுவடை செய்யமுடியாது கஷ்டப்படுகின்றனர். பெருந்தொகையான மரவெள்ளித் தோட்டங்களும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. தங்கள் ஜீவனோபாயத்திற்கான வாழ்க்கையை நடாத்துவதற்கான வருமானம் அனைத்தையும் இழந்தநிலையில் இந்த விவசாயிகள் அகதிமுகாம்களில் விரக்தியடைந்த நிலையில் காணப்படுகின்றனர். (72)

## ஜே. ஓ. சி. குண்டுவெடிப்பு வழக்கு விசாரணை நவம்பர் 30ல் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள கூட்டுப் படைத் தலைமைச்செயலகக் குண்டுவெடிப்பு வழக்கு நவம்பர் 30ம் திகதி ஆரம்பமாகும் என்று மேல்நீதிமன்ற நீதிபதி வெஸ்லி அபயசேகர தெரிவித்துள்ளார்.

இவ்வழக்குப் பற்றி நீதிமன்றம் தெரிவித்திருப்பதாவது இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரிகள் 6-ம் மாடியிலுள்ளகுற்றப்புலனாய்வு இயக்குநர் பொறுப்பில் தற்போது வைக்கப்பட்டிருந்தாலும் அவர்களின் சார்பில் வாதாடவிருக்கும் வழக்கறிஞர்களுடனும் நீதிமன்ற பதிவாளருடனும் நீதிபதி ஆலோசனை நடாத்த இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் எதிரிகள் சார்பில் திரு ஜி ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) திரு. மோதிலால் நேரு உட்பட வாதாடவுள்ளார்கள்.

நவம்பர் 30ம் திகதி ஆரம்பமாகும் மேற்படி வழக்கு விசாரணைகள் தொடர்ந்து இருவாரங்களுக்கு நடைபெறுமென்று மேல்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (வி)

## இன்று தேர், தீர்த்தம்

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு இணிங்கித் தோட்ட முத்துக்குமாரசாமி ஆலய தேர் தீர்த்தம் இன்று நடைபெறுகின்றது.

நாளை பூங்காவனத் திருவிழா நடைபெறும். (அ)

## இராசி பலன்

11-09-1992
வெள்ளிக்கிழமை
(தமிழுக்கு ஆவணி 26)

பூரணை முழுவதும், சதயம் மு. இ. 9–10 வரை, இராகு காலம் காலை 10-33 முதல் 12-03 வரை, சுபநேரம் காலை 6-03 முதல் 7-33 வரை, சித்த யோகம்.

மேடம்: காரியசித்தி, பிணி அகலும், மன மகிழ்ச்சி.
இடபம்: மனைவியால் பெருமை, பயணம், குடும்ப சுகம்.
மிதுனம்: வீண் அலைச்சல், பயமிகுதி, பகைவர்தொல்லை.
கடகம்: மனத்துக்கம், குடும்ப சஞ்சலம், வெறுப்பு.
சிங்கம்: சுபகாரியம், அதிகாரிகள் உதவி, வெற்றி
கன்னி: மனையில் சுகம், உறவினர் வருகை, நண்பர் உதவி.
துலாம்: பந்துக்கள்தொல்லை அவமதிப்பு, பணமுடை.
விருச்சிகம்: கடும் யோசனை, காரியத் தடை, அலைச்சல்.
தனுசு: சகோதர அன்பு, காரியஜயம், தொழில்சிறப்பு.
மகரம்: பங்காளன் துயர். கடன்சுமை, குடும்பபிரிவு.
கும்பம்: புதிய முயற்சி, எதிர்பார்த்தவை கிட்டல், பிதா உதவி.
மீனம்: நம்பிக்கைத்துரோகம், மனவருத்தம், சயனசுகக் குறைவு.

—ஜோஸ்யர்

யாழ்ப்பாணம்

# தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில்
# ★ இரதோற்சவ சிறப்பு மலர் - 1992 ★

முருகன் புகழ்பாடும் நூல்களும், புராணங்களும் அவனுக்குச் சூட்டும் நாமங்கள் பலப்பல. அவை முருகனது அருட்செயல்களையும், மகிமையினையும் எடுத்துக் காட்டுகின்றன.

முருக நாமங்களுள் 'கந்தன்' எனும் நாமம் முருக வழிபாட்டில் சிறப்புக்குரியது. முருகனைக் கந்தனாகக் கண்டு வழிபடும் பக்தர்களே ஈழத்தில் அதிகம்


கந்தக்கடவுளின் உதயத்தினைக் கந்தபுராணம் 'ஒரு திருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய' எனச் சிறப்பிக்கிறது. 'கந்தன்' என்றால் ஒன்றிணைக்கப்பட்டவன் என்பது பொருள்.

கந்தன் தேவசேனாபதியாகி சூரனுடன் போருக்குப் புறப்படமுன் சிவனிடம் விடை பெறுகிறார். அப்பொழுது சிவனால் வழங்கப்பட்ட படைக்கலமே 'கந்தன் திருக்கைவேல்'' ஆகும். இவ் வேலைக் கந்தபுராணம் 'சேவ சிறந்த உதாரணமாகும். இவற்றினைவிட 'உச்சிக்கிழான் கோட்டம்'' 'ஊர்க்கோட்டம்'' 'வேற்கோட்டம்' எனும் சிலப்பதிகார அடிகளும் வேல்வழிபாட்டு மரபினைத் தெரிவிக்கின்றன.

வேல்வழிபாடு ஈழநாட்டில் மிகவும் பிரசித்தமானது. வேலை நிறுவி அதனைக் கந்தனாகக்கருதி வழிபடும் மரபு ஈழத்தில் சிறந்து விளங்குகிறது. ஈழத்து முருகவழிபாட்டுச் சின்னமாகப் பெரும்பாலும் கந்தன் திருக்கை வேலே விளங்குகிறது. இந்த வேல் வழிபாட்டை ''வேதாகம விதிகளிற்கமையாத கிராமிய வழிபாடு'' எனத் திரு ச. சண்முகசுந்தரம் கூறுகிறார்.

தொண்டமனாறு, செல்வச் சந்நிதி நல்லூர் கந்தசாமி கோயில், மண்டூர் கந்தசுவாமி கோயில், வெருகல் சித்திர வேலாயுதசுவாமிகோயில் முதலானவை வேல் வழிபாட்டு மரபுகள் நிலவும் கந்தனாலயங்களுள் சிலவாகும்.

கந்தன் திருக்கைவேலே வீதியுலா வருவதைக் காணலாம். வேல் நன்கு அலங்கரிக்கப்பட்டு மயில் மீது எழுந்தருளச் செய்து தினமும் வீதியுலா வருகிறது. இன்று சந்நிதியான் ரதோற்சவ விழா கந்தப்பெருமான் வேலிலேயே எழுந்தருளி, திருவுலாவந்து பக்தர்களின் அல்லல் தீர்த்தருள்கிறான்.



# கந்தன் திருக்கைவேல் மகிமை

லும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி' எனச் சிறப்பிக்கிறது. முருகவழிபாட்டின் அடிப்படையாக கந்தன் திருக்கைவேலே விளங்குகிறது.

கந்தனை வேலில் ஆவாகனம் செய்து பயபக்தியோடு வழிபடும் மரபு தமிழ்நாட்டில் பெருவழக்காயுள்ளது. பண்டைத்தமிழ் இலக்கியங்கள் கூறும் ''வேலன் வெறியாட்டு'' வழிபாடு இதற்குச்

நல்லூர் கந்தன் மகோற்சவ காலங்களில் முதல் பத்து நாட்களும் கந்தப்பெருமான் வேலாயுதத்திலேயே வள்ளி தெய்வானை சமேதராய் எழுந்தருளி வீதியுலா வந்து பக்தர்களிற்குக் காட்சி கொடுக்கின்றான்.

தொண்டமனாறு செல்வச் சந்நிதி உற்சவம் அண்மையில் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கும்

கதிர்காமக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டுக் கொழும்பு நகரில் ஆடிவேல் விழா வருடா வருடம் கொண்டாடப்படுகிறது. இது மிகவும் பக்தி பூர்வமாகவும், கோலாகலமாகவும் நடைபெற்று வருகிறது.

—ந. புகன்சிறீந்திரன்
பி. ஏ. (அனர்ஸ்)
(நுணுவில் கிழக்கு, அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி)

கந்தனது திருக்கைவேல் மகிமையினைக் கந்தபுராணம், தணிகைபுராணம், திருப்புகழ்,
[4ம் பக்கம் பார்க்க]

## துயருறும் மக்களைக் காத்தருள்வாய்!

ஆற்றங் கரையுறை கதிர் வேலவனே!
அமரர் குறைதீர் சிவ மைந்தனே!
காற்றினிலும் வேகமிக் குடைய ஞானக்
கதிர் வேலா யுதத்தா லன்று
சூர்மார்பு பிளந்தவா, தேவர் துயர்
துடைத்த தூய கருணைச் சோதியனே!
சேற்றிடை அமிழ்ந்திட்ட தாமரை போல்
துயருறும் மக்களைக் காத்தருள்வாய்.

— சரசாலையூரரன்.

# சந்நிதியான் ஞானவேல் துணை நிற்பதாகுக!

செல்வச்சந்நிதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி எமக்குத் திருவருள் பாலிக்கின்ற முருகப்பெருமன் தேரேறி உலா வருகின்ற அருட்காட்சி உன்னதமான தெய்விக நிகழ்வாகும். முருகவேளின் திருக்கையில் விளங்கும் வேல் சிவஞானத்தின் அறிகுறி. ஆழம் விசாலம், கூர்மை ஆகிய மூவகை இலக்கணங்களும் பொருந்திய ஞானவேல் 'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே' என மணிவாசகப் பெருந்தகை சிவபுராணத்தில் பரம்பொருளைப் போற்றித் துதிக்கின்றார். சிவ ஞான வேலினால் மும்மல வலிமையை அழித்தவர் முருகவேள் இந்திரராகிப் பார்மேலின்பமுற்று இனிதுமேவி — சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதியதனிற் சேர்வதற்கு உறுதுணையாவது அவரது ஞானவேல். அது என்றும் எமக்குத் துணைநிற்கும்.

பரம தயாநிதியாகிய செல்வச் சந்நிதி முருகப்பெருமான் எம் மக்கள் அனைவரும் துயர் நீங்கி வளமுடனும் இன்புடனும் நலமேவாழ நல்லநள் பாலிக்கும் வண்ணம் அவன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம். கலாநிதி

ப. கோபாலகிருஷ்ணன்

# வினை தீர்க்கும் வேலவன் சந்நிதிக் கந்தன்

''ஆற்றங்கரை வேலனுக்கு அரோகரா, செல்வச்சந்நிதியானுக்கு அரோகரா, கல்லோடைக் கந்தனுக்கு அரோகரா'' என்ற பக்தர் வெள்ளம் அரகர கோஷம் எழுப்ப இன்று ரதோற்சவமூர்த்தியாக வேற்பெருமான் எழுந்தருளி வருகிறார். அவர் பக்தர் புடைசூழ அடியவர்களும் தொண்டர்களும் தொடர்ந்து வர ரதமேறி வீதியுலா வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இச்செல்வச்சந்நிதி கந்தப்பெருமான் வீரவாகு தேவராலும், ஐராவசு முனிவராலும் வழிபாடு செய்யப்பட்ட பெருமைமிகு சிறப்பை தன்னகத்தே கொண்டுள்ளார். திருச்செந்தூர் வந்த கந்தப்பெருமான் தூதுப்பணிக்காக அனுப்பபட்ட வீரவாகு தேவர் முதன்முதலில் வட இலங்கையின் வல்லி நதிக் கரையிலேயே தன் காலடியை வைத்தார்.

இப்பாதச்சுவடு இன்றும் கோவிலின் வடக்கில் உள்ள கல்லோடைக்கு அருகாமையில் உள்ளது.

பின்பு தூதுப்பணி முடித்து திரும்பும்போது சந்திக்காலம் வந்தமையால் அதே வல்லி நதிக்கரையில் (தொண்டைமானாற்றங்கரையில்) சந்திக்காலப் பூசையை எம்பெருமானுக்குச் செய்தார். சந்திக்காலப்பூசை செய்யப்பட்ட இடம் மருவி சந்நிதியாகியது.

இவ்விடத்திலேயே ஐராவசு முனிவரும் வழிபாடு செய்து சாமாதியடைந்ததாக கர்ண பரம்பரைக் கதை கூறுகின்றது. வியாழபகவானது சாபத்திற்கு ஆளாகிய ஐராவசு என்ற கந்தர்வன் சிகண்டி முனிவரால் கதிர்காமத்தில் சாபவிமோசனம் பெற்று இலங்கையின் வடபால் வந்து வல்லிநதிக் கரையில் வீரவாகுதேவர் பூசித்த அதே இடத்தில் கந்தப்பெருமானை வழிபாடு செய்து அவர் முத்தியடைந்தார். அவர் சமாதியடைந்த இடத்தை இன்றும் பூவரசமரம் குடை நிழலாக்கிக் கொண்டு இருப்பதைக் காணலாம்.

(4ம் பக்கம் பார்க்க)

## இன்னல் தீர முருகன் நாமத்தை சொல்வோமாக

யாழ்ப்பாணத்திலுள்ள தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோயில் சின்னக்கதிர்காமம் என்று அழைக்கப்படுகிறது

கதிர்காமத்தில் வாய்கட்டிப் பூசை நடைபெறுவது போல் இங்கும் வாய் கட்டிப் பூசை நடைபெறுகிறது. கொடியேற்றத்திற்கு முதல் நாள் ஒரு மைல் தூரம்வரைசென்று கதிர்காம முருகனை அழைத்துவரும் சடங்கு இன்றும் நடைபெற்று வருகிறது. முருகன் வந்துவிட்டார் என்பதற்கு அறிகுறியாக சில மழைத் துளிகள் வீழும் காட்சி இன்றும் நடைபெற்று வருகின்றது.

எங்கள் இன்னல் தீர முருகன் நாமத்தைச் சொல்வோமாக! தேவர் குறை தீர்த்த முருகப்பெருமான் எங்கள்
(4ம் பக்கம் பார்க்க)

# வேண்டியதெல்லாம் ஈய்ந்தருள்வான் முருகன்

தேர்த்திருவிழாக் காண்பார் பெரும் புண்ணிய பேறுடையவர்கள். இவ்விழாவின் தத்துவப் பொருள்களை எடுத்துரைக்கப் புகின் மிக விரியும். நல்லூரிப்பெருமானை அலங்கார முருகன் என்பார். சந்நிதிசெவ்வேளை அன்னதான முருகன் எனப் போற்றி மகிழ்வர் சைவப் பெருமக்கள். தருமங்களில் சிறந்தது அன்னதானம். அதனை சந்நிதியிலேதான் காணலாம். கலியுகத்துக்குகந்தது பக்தி. இதற்குச் செலவு இல்லை. காதலாகிக் கசிந்துருகி வேண்டினால் வேண்டியதெல்லாம் ஈந்தருள்வான் முருகன். சந்தேகம் வேண்டாம். அவனருளால் எல்லோரும் இன்புற்று வாழவேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்
(நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

# அன்னதான கந்தன் அருள் தர்மத்தை நிலைநிறுத்தும்!

அனைவர்க்கும் அருள்பொழிந்து அறத்தை நிலைநிறுத்தும் அறநெறி முறையாக அன்னதானச் சிறப்பு அமைந்த தலம் சந்நிதியாகும். அல்லல் நீங்கவும், அன்பு நிலைபெறவும் சைவத்தமிழ் மரபுகள் ஈழத்து முருக வழிபாட்டின் முதன்மையாகும்.

காலத்தின் மாறுதல்கள் கருணையுடையோர்க்கு பல சோதனைபோல, சைவத்தமிழ் மரபுகள் பல வெளிநாட்டவர்களது படையெடுப்புகளினால் சீர்குலைந்த நிலைகள் சீர்பெற வேண்டிய காலம் இதுவாகும்.

அன்னதானமும், தர்மசிந்தனையும், விபூதியின் மகிமையும், சமூகசேவையும் சைவத்தமிழ் மரபாக வளர்ந்த நிலைகள தலயாத்திரைகளாக சிறப்புற்றன இவற்றிற்கு ஏற்பட்ட இடர்களையும் நிலையில் சாதனையளர்களாகதர்மம்நிலை பெறவும், அதர்மம் விலகிடவும் அருள்மழை பொழிந்து அல்லல் நீக்கிட தேரேறிவந்து திருவருள் தருகவென தீர்க்கமாக வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி.

வே. கெ. தனபாலன், பி. ஏ.
(தலைவர், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை)

மலர் வெளியீடு:
யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை

## "மாணிக்கத் தேரிலே மயில் வந்தது அந்த மயிலாசனத்திலே வேல் வந்தது"

பரமீஸ்
பத்திரிகை விற்பனையாளர்,
இல. 01, பஸ் நிலையம்,
சாவகச்சேரி.

சிவா ஸ்ரோர்ஸ்,
இல 12, சந்தை உட்புறம்
(மார்க்கற்),
சாவகச்சேரி.

பிள்ளையார் களஞ்சியம்,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

முருகன் அரிசி ஆலை,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

இராசம் அரிசி ஆலை,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

கீதா ஆபரண மாளிகை,
இல. 12, நவீன சந்தை,
சாவகச்சேரி.

சிறந்த
சிற்றுண்டிகளிற்கும்
பானங்களிற்கும்
கிரியோன் கூல்பார்,
இல 02, நவீன சந்தை,
சாவகச்சேரி.

ஸ்ரீ விக்னேஸ்வரா
களஞ்சியம்,
மொத்த சில்லறை
வியாபாரிகள்,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

நவ நாகரீக
புடவை வகைகளிற்கு
தாரகை ரெக்ஸ்ரைல்,
இல 8 நவீன சந்தை,
சாவகச்சேரி.

சந்திரன்ஸ்
வர்த்தக நிலையம்,
இல. S. B. 5,
சந்தை உட்புறம்,
சாவகச்சேரி.

வீ. எம். கே.
நகை மாளிகை,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

★ மீண்டும் ஒரு வெட்டு

# அரச ஊழியர்களுக்கான நஷ்டஈடு உடன்நிறுத்தம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நஷ்டஈடு உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திறைசேரியில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாகவே இந்த நஷ்டஈடு நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது.

அரசின் இந்த திடீர் நடவடிக்கையினால் இராணுவ வன்முறைகளால் தமது இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்ந்த வடக்கு-கிழக்கு அரச ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (கே-சி)

---

**19 படையினர்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது

ஏனையவர்களின் சடலங்களை தேடும் பணியில் ஹெலிகொப்டர்களும், கடற்படை படகுகளும் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

---

**படை நடவடிக்கை**

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பல இடங்களில் போடப்பட்டுள்ளது.

இதனிடையேஇந்தநடவடிக்கையால் வடபகுதியில் படை நடவடிக்கையில் பாதிப்பு ஏற்படலாமெனவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன. (சி-சு)

---

**முப்படையினரின்**

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

முப்படைகளுக்கும் ஆட்கள் திரட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த இருவருடத்தில் படையினரின் தொகை 2 லட்சமாக உயர்த்தப்பட்டுவிடுமெனவும் திரு. ரணில் விக்கிரமசிங்க கூறினர். (சி)

---

**தொண்டமனாறு**

[3 ம் பக்கத் தொடர்ச்சி]

கந்தரனுபூதி, கந்தரலங்காரம், வேல்விருத்தம் முதலான கந்தன் புகழ் பாடும் நூல்கள் கூறுகின்றன. கந்தபுராணம், தனிவேல், சூர்வேல், ஞானவேல், வடிவேல். உடம்பிடிபடைகள் நாயகம் எனப் பலவாறு போற்றுகிறது.

கந்தசஷ்டி கவசம் அழகுவேல், புனிதவேல், நல்வேல், பெருவேல், திருவேல், அருள்வேல், பருவேல், செவ்வேல், அயில்வேல், வல்வேல், கருணைவேல், முரண்வேல், எதிர்வேல், கைவேல், வச்சரவேல், அனையவேல், சதுர்வேல், கூர்வடிவேல் எனப் பலவகைப்படுத்திக் கூறுகிறது.

வேலின் மகிமையினைக் கூற வந்த கந்தன் அருள்பெற்ற அருணகிரிநாதர் ''தணித்த வழிநடக்குமென திடத்து மொருவலத்து மிகிபுறத்து மருகடுத்து இரவு பகல் துணையதாகும்'' எனப் போற்றுகிறார்.

இவ்வாறு வேல் ஏந்திநின்று பக்தர்கள் குறை தீர்க்கும் கந்தனை ''வேல் ஏந்திய பெருமான்'' எனவும் அவன் புகழ் பாடும் நூல்கள் போற்றுகின்றன.

கந்தன் திருக்கைவேல் வழிபாடு ஆகம முறைப்பட்ட வழிபாட்டு மரபினுள் சங்கமிக்கும்போது பல தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

கந்தன் திருக்கைவேல் அகப்பகை வென்று நிற்பதால் வெற்றிக்குரியது எனும் பொருளில் 'வேல்' எனப் போற்றப்படுகிறது. ஏனைய படைக்கலங்கள் யாவும் புறப்பகையை மட்டும் வெல்கிறது. உடம்பை அழிக்கிறது. ஆனால் கந்தன் திருக்கைவேலோ உடம்பை அழித்து உயிரைக் காத்து, உயிருக்கு மயக்கமூட்டும் அறியாமையை அகற்றுகிறது. உள்ளொளியைப் பெருக்குகிறது என்பது கந்த புராண விளக்கம்.

வேலின் நுனி மிகவும் கூர்மையானது. நுனிக்கு அடுத்த பகுதி அகன்றது. ஏனையபகுதி நீண்டிருக்கிறது. இது முத்தி பெறுவதற்குதவும் ஞான மார்க்க விளக்கமாகும்.

கந்தன் திருக்கைவேல் எப்பொழுதும் கந்தக் கடவுளின் நெஞ்சுடன் சாத்தப்பட்டிருக்கிறது. நெஞ்சு நினைப்புக்குரிய இடமாகும். நினைவால் ஆக்கப் பெறுவது அநுக்கிரகமாகும். வேலானது நெஞ்சுடன் சாத்தப்பட்டிருப்பதால் வேலின் மார்க்கவழியிலேயே ஆன்மாக்களை அனுக்கிரகித்து, ஆட்கொள்கிறார் கந்தப்பெருமான் என்ற தத்துவ உண்மை புலனாகிறது.

---

**இன்னல் தீர**

(3ம் பக்கத் தொடர்ச்சி)

குறைகளையும் தீர்த்து வைப்பார் என்பது பக்தர்களுடைய நம்பிக்கை.

சந்நிதியில் பூசை முடிந்த உடனே தீர்த்தம், திருநீறு, மருந்து என மூன்று கைப்பிரசாதங்கள் வழங்கப்படுகின்றன. இந்த மருந்தை உட்கொண்டு தீராத நோய்களெல்லாம் தீர்ந்தமைக்கு ஆயிரக்கணக்கானோர் சாட்சி பகர்கின்றனர்.

ஆத்மஜோதி
நா. முத்தையா
(தலைவர், இந்து சமய பேரவை)

---

**வினை தீர்க்கும்**

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ஈழமணித் திருநாட்டின் ஆறுபடை வீடுகளில் முதன்மையானதும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பெருமைகளைக் கொண்டதுமாகிய செல்வச்சந்நிதி கந்தப்பெருமானை மனத்தாலே நினைத்தாலே அவன் அருள்புரிவான். அவன் பாதாரவிந்தத்தைப் பணிந்து அவனருள் பெறுவோமாக.

சி வி. இராசேந்திரம் ஐயர்
சந்நிதி,
தொண்டைமானாறு.

---

## யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று பாரதி விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 'தமிழ் மன்றம்' நடாத்தும் மகாகவி பாரதி விழா இன்று காலை 8மணிக்கு கல்லூரி ஒட்பி மண்டபத்தில் அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் நடைபெறும்.

மங்கள இசையை தொடர்ந்து, சிறப்பு பாரதி கருத்தரங்கம் நடைபெறும் இக்கருத்தரங்கில் திரு. டொமினிக் ஜீவா, திரு நா. குழந்தைவேல், திரு ஏ. குமாரவேல், திரு பொ. அருந்தவநாதன், திரு ஆறு. திருமுருகன், திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் பங்குபற்றுவா.

இதைத்தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவினர் வழங்கும் நாடகம், இன்னிசை, நாட்டிய நடனம் நடைபெறும். (சி)

---

## அறிவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்கான அறிவியல் கருத்தரங்கு தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 30 மணிக்கு கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு நடுவப்பணியகத்தில் 'உயிரினத்தின் தோற்றம்' என்ற தலைப்பில் கருத்தரங்கும் அது தொடர்பான ஒளிப்பதிவு நாடாவும் காண்பிக்கப்படும்.

---

## குமண வந்தது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து புறப்பட்ட குமண கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது. பொருட்கள் இறக்கும் பணி உடனடியாக ஆரம்பமாகியது.

அரிசி, சீனி, மாவு, பால்மா உட்பட தபாற்பொதிகள், மருந்து வகைகள், ஆகியனவும் எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ் வைத்தியசாலைக்குத் தேவையான பெற்றோல், டீசல், மண்எண்ணை மருந்து வகைகள் எடுத்துவரப்பட்டிருக்கின்றன. (56)

---

**தமிழீழ**

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டார்.

நேற்றுக்காலை 7.15மணிக்கு யாழ் நகரில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், மூத்த உறுப்பினர்கள் திரு. இளங்குமரன், திரு. தேவர், திரு. வே. பாலகுமாரன் உட்பட புலிகள் இயக்கத் தளபதிகள், முக்கிய உறுப்பினர்கள்உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டார்கள்.

இதையடுத்து வன்னிமாவட்டத்தில் உள்ள கிளிநொச்சியில் முதலாவது காவல்துறை பணிமனை திறக்கப்பட இருப்பதாகவும் இவற்றுடன் நாகர்கோவில் வல்வெட்டித்துறை, பளை ஆகிய பகுதிகளிலும் புதிய காவல்துறை பணியகம் மிகவிரைவில் திறக்கப்பட இருப்பதாகவும் திரு. நடேசன் தெரிவித்தார். (வி)

---

**பலகோடி**

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ணங்கள், காஸ் அமைப்பதற்கேற்ற உபகரணங்கள், படையினருக்கான பாதுகாப்பு கவசங்கள், அளவையியல் பொருட்கள், அதிரடிபடையினருக்கான உபகரணங்கள், பாரிய தளபாடங்கள், கடற்படை ஆயுதங்கள், பூச்சி கொல்லி பெயின்ற் மற்றும் அசிட் திரவம், மோட்டார் சயிக்கிள்கள் போன்ற பல ராணுவ தேவைகளுக்கான ஆயுத மற்றும் உபகரணங்களுக்கு கேள்விகள் கோரப்பட்டுள்ளன' (கே)

---

## கலை விழா

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் பொருட்டு யாழ் லயன்ஸ் கழகம் நடத்தும் கலை விழா நாளை சனிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் எந்தையும் தாயும், மானுடம் வெல்லும் வரை ஆகிய நாடகங்களும் கர்நாடக இசைக்கச்சேரியும் நடைபெறவுள்ளது.

---

**கொழும்பில்**

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இவரது நோக்கம் என்ன என்பதுபற்றி புலனாய்வுப் பொலிஸார் தற்போது தீவிர விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கே-சி)

---

**தமிழகம்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் கட்சியின் 3 நாள் மாநாட்டில் முதல் நாளன்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் எஸ். ராம்தாஸ் எச்சரித்தார்.

இந்த மாநாட்டில் உரை நிகழ்த்தியவர்கள் தமிழர்களுக்கு தாயகம் ஒன்று தேவை என்று கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் ''தமிழர்களின் வீரமிகு தலைவர்'' என்று தமது கட்சி கருதுவதாகவும் ராம்தாஸ் கூறினர்.

திரு. ராம்தாஸ் தொடர்ந்து பேசுகையில்: விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுதான் தமிழர்பிரச்னைக்காக போராடுகிறது. இந்த இயக்கத்தை இந்திய அரசு தடைசெய்திருப்பதை இலங்கைத் தமிழரின் ஒட்டுமொத்தமான நலன்களைக் கொண்டு எதிர்க்கிறோம்.

சுதந்திரம் பெற்றநாள் தொடக்கம் எமது தமிழ் இனம் மட்டுமே பிரச்னையைச் சந்தித்து வருகிறது. மற்ற இனத்தவர்களுக்கு இப்படியான பிரச்னைகள் இல்லை.

முதலில் பர்மாவில் இருந்து தமிழர்கள் விரட்டப்பட்டார்கள். பின்னர் இலங்கையில் இருந்து சாஸ்திரி - சிறிமாவோ ஒப்பந்தத்தின்கீழ் ஐந்துலட்சம் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டார்கள். இதேபோன்று பம்பாய் நகரில் சிவசேனையாலும் அண்டை மாநிலமான கர்நாடகத்திலிருந்தும் விரட்டப்பட்டுள்ளார்கள். (சு)

---

## திங்கள் தபால்விநியோகம

(யாழ்ப்பாணம்)

குமணக் கப்பலில் கொண்டுவரப்பட்ட தபால்கள் திங்கள் முதல் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுமென்று யாழ். தபால் நிலைய வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

275 தபால் பொதிகள் குமண கப்பலில் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் இவை நாளை பருத்தித்துறையிலிருந்து யாழ் நகருக்குகொண்டு வரப்பட்டு திங்கள் முதல் விநியோகம் செய்யப்படுமென்றும் தெரியவருகின்றது. (வி)

---

**பயங்கரவாத**

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை தமிழர் விடயத்தில் திட்டவட்டமான கொள்கையேதும் இல்லாத நிலையில் இந்திய அரசு புலிகள் இயக்கத்தை தடைசெய்தது சரியல்ல என்றும் கூறினர்.

பாட்டாளி மக்கள் கட்சியின் இம்மாநாட்டில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது (சி)

---

**குடியேற்றத்தை**

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டதாக புலிகள் அனைத்துலகச் செயலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பில் பெருமளவு சிங்களக் குடியேற்றம் நடப்பதாகவும் இதனை தொடரவிடாது தடுக்கும் ஒரு நடவடிக்கையே இத்தாக்குதலெனவும் அவ்வறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் திருமலை, மணலாறில் 26 படையினர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. [சி]

---

**ஷெல் தாக்குதல்**

(1 ம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவத்தினரால் ஏவப்பட்டஷெல்கள்அராலி, வட்டுக்கோட்டை கடற்கரை பிரதேசங்களில் விழுந்து பாரிய சத்தத்துடன் வெடித்தன. (139)

---

**தாக்குதலை**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசங்களில் படையினருக்கு உதவியாக தமிழ்குழுக்கள் செயற்பட்டு வருவது தெரிந்ததே.

---

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா சிவக்கொழுந்து

தாவடி திருமதி பொன்னம்மா சிவக்கொழுந்து 10-9-92 வியாழன் காலமானர் இவர் சிவக்கொழுந்துவின் அன்புமனைவியும், திருமதி அன்னலட்சுமிதம்பிராசா (இளைப்பாறிய ஆசிரியை, திருமதி சரஸ்வதி இராசரத்தினம் (ஆசிரியை, லண்டன்), செல்வரத்தினம் (ஜெர்மனி), தருமராசா (பிரான்ஸ்), செல்வராசா (வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை), திருமதி பரமேஸ்வரி சண்முகரத்தினம் (ஆசிரியை, கொக்குவில் இந்துக்கல்லூரி, திருமதி கமலேஸ்வரி ஜெயராசசிங்கம், திருமதி இராசேஸ்வரி இந்திரன், திருமதி தவமலர் சீவரத்தினம், (ஆயுர்வேத வைத்தியர், வடமராட்சி), திரு. ஆனந்தகிருஷ்ணன், காலஞ்சென்ற சச்சிதானந்தம் ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவபாலன் (கனடா), கலையரசி, கருணபாலன், கலாறஜனி, வித்தியமலர், ராஜன், றஞ்சித், சுனித்தா, மயூரன், றேகினி, சசி, சுகி, லதா, குமுதா, சிவப்பிரியன், தர்சனு ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார் அன்னரின் இறுதிக்கிரியைகள் 11-09-92 இன்று பிற்பகல் 3 மணியளவில் அன்னரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி தவமலர் சீவரத்தினம்
[ஆயுர்வேத வைத்தியர்]

தாவடி வடக்கு,
தாவடி. [சி-6804]

---

## காடு செழித்தால் நாடு செழிக்கும்

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தார் [illegible] யாழ்ப்பாணம் [illegible] 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10330/